
MINISTRY OF MANPOWER

(Updated 3 June 2020)

# மின்னியல் முறையில் பணத்தை வீட்டிற்குப் பாதுகாப்பாக அனுப்ப வழிகாட்டி

## மின்னியல் தளத்தைப் பயன்படுத்தும் போது பணத்தை பாதுகாப்பாக வீட்டிற்கு அனுப்ப இந்த ஆறு படிநிலைகளைப் பின்பற்றவும்:





### உங்கள் வங்கி கணக்கை அமைத்தல்

எஸ்எம்எஸ் மூலம் அல்லது ஏடிஎம் தானியங்கி இயந்திரம் மூலம் உங்கள் வங்கிக் கணக்கைச் செயல்படுத்தலாம். உங்கள் கணக்கைச் செயல்படுத்துவதில் சிரமங்களை எதிர்கொண்டால் அல்லது உங்கள் ஏடிஎம் அட்டையைப் பெறவில்லை என்றால், தயவுசெய்து உதவிக்கு உங்கள் முதலாளியை அணுகவும்.



### உங்களுக்கு விருப்பமான பணம் அனுப்பும் முகவரை தேடும் செயலில் தீவிரமாக ஈடுபடுங்கள்

உங்களுக்குப் பழக்கமான பணம் அனுப்பும் முகவர், இணையம் வழி பரிவர்த்தனைகள் செய்பவரா என்பதை முதலில் தெரிந்துக்கொள்ளுங்கள். அவரிடம் இணையத் தளம் இருந்தால், பண பரிவர்த்தனையை அவரின் வலைத்தளம் அல்லது மொபைல் செயலி மூலம் செய்யலாம்.

**உங்கள் தேடலைக் குறைப்பதற்கு உதவ, பின்வருவனவற்றைக் கவனியுங்கள்:**


1) பணம் அனுப்பும் நிறுவனம் உரிமம் பெற்றுள்ளதா என்பதை அறிந்துக்கொள்ள, அவர்களின் பெயரை சிங்கப்பூர் நாணய வாரியத்தின் இணையத் தளத்தில் தேடவும். (**https://eservices.mas.gov.sg/fid**)
2) ஏற்றுக்கொள்ளப்பட்டப் பணம் செலுத்தும் முறை
3) பணம் உங்கள் குடும்பத்தைச் சென்றடைய எதிர்பார்க்கப்படும் காலம்
4) உங்கள் குடும்பத்தினர் பணத்தைப் பெறுவதற்கு என்னென்னவற்றை செய்ய வேண்டும்.
5) உங்கள் குடும்பத்தினர் பணம் பெறவில்லை என்றால், அதற்கானத் தீர்வு



### என்ன விவரங்கள் தேவை என்பதைக் கண்டறியவும்

சீரானதொரு பரிவர்த்தனைக்கு, என்னென்னத் தகவல்கள் தேவைப்படும் என்பதை எப்போதும் உங்கள் பணம் அனுப்பும் முகவரிடமிருந்து தெரிந்துக்கொள்ளவும்.

**உதாரணங்கள்:**
உங்களைப் பற்றிய விவரங்கள்: முழுப் பெயர், (FIN) அடையாள அட்டை எண், பிறந்த தேதி, மொபைல் எண் மற்றும் சொந்த நாட்டின் அடையாளம்
பணம் பெறுபவரைப் பற்றிய அடையாள விவரங்கள்: முழுப் பெயர், வங்கி கணக்கு எண், வங்கி பெயர் மற்றும் வங்கி கிளை



### தனிப்பட்ட விவரங்களை வெளியிடுவதில் எச்சரிக்கையுடன் செயல்படுங்கள்

சரிபார்ப்பு காரணங்களுக்காக, உங்களின் அடையாளம் பணம் அனுப்பும் முகவர்களுக்குத் தேவைப்படும். உங்கள் வேலை அனுமதி அட்டையின் படத்தை அவர்களுக்கு அனுப்ப வேண்டியிருக்கலாம் அல்லது வீடியோ அழைப்பு மூலம் அவர்கள் உங்களைத் தொடர்பு கொள்ளலாம். உங்கள் விவரங்களைக் கேட்பவரின் அடையாளத்தைச் சரிப்பார்த்தப் பிறகே, உங்கள் தனிப்பட்ட விவரங்களை நீங்கள் அவரிடம் வெளிப்படுத்த வேண்டும். பணம் அனுப்ப உரிமம் பெற்ற முகவர்களுடன் மட்டுமே செயல்படுங்கள்.


உங்கள் தனிப்பட்ட வங்கி பயனாளர் அடையாளம், கடவுச்சொல் / தனிப்பட்ட அடையாள எண் மற்றும் OTP (ஒரு முறை கடவுச்சொல்) ஆகியவற்றை பணம் அனுப்பும் முகவர் உட்பட யாருடனும் பகிர்ந்து கொள்ள வேண்டாம். இந்த விவரங்களை யாரும் அறியக்கூடாது.




### பணம் அனுப்பும் முகவருக்குக் கட்டணம எவ்வாறு செலுத்துவது என்பதை அறிந்துக்கொள்க

ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்டண முறையில் பணம் அனுப்பும் பரிவர்த்தனைக்கு உங்களால் பணம் செலுத்த முடியும் என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

**கட்டணம் செலுத்த சில பொதுவான முறைகள்:**
1) வங்கி பரிமாற்றம் / ஐ-வங்கி (i-banking)
2) பேலா (Paylah) அல்லது பேனாவ் (Paynow)
3) கடன் / பற்று அட்டை




### விவரங்களைப் பற்றி.நன்கு தெரிந்து வைத்துக்கொள்வது அவசியமானதாகும்

கட்டணம் செலுத்துமுன் நீங்கள் இணையம் வழி உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் சரிபார்க்க வேண்டியது அவசியமாகும்.
பூர்த்தி செய்யப்பட்ட பரிவர்த்தனையின் ஆதாரமாக ஒரு புகைப்படம் எடுத்துக் கொள்ளுங்கள்.

பெறுநர் பணத்தைப் பெற்று விட்டார்களா என்பதை உறுதிப்படுத்த, அவரைத் / அவளைத் தொடர்பு கொள்ளுங்கள். பணம் செலுத்திய தேதியிலிருந்து ஏழு வணிக நாட்களுக்குள் பெறுநர் பணத்தைப் பெறுவதை பணம் அனுப்பும் முகவர்கள் உறுதி செய்ய வேண்டும். உங்கள் குடும்பத்தினர் பணத்தைப் பெறவில்லையென்றால் பணம் அனுப்பும் முகவரை விசாரிக்கவும்.

**MOM- இன் தந்தி ஒளிவழி (டெலிகிராம் சேனல்) வாயிலாக கொவிட்-19 பற்றியத் தகவல்களைத் தெரிந்து வைத்துக்கொள்ளுங்கள்:**

MINISTRY OF MANPOWER

ADVISORY
(Updated 5 June 2020)

# உரிமம் பெற்ற இணையம் வழி பணம் அனுப்பும் சேவைகள் மற்றும் கை தொலைபேசி செயலிகளை மட்டுமே பயன்படுத்தவும்

## இணையம் வழி பணம் அனுப்பும் வலைத்தளங்கள் மற்றும் கை தொலைபேசி செயலிகள்




✔ பணம் அனுப்பும் சங்கத்தின் இணையதளத்தில் பணம் அனுப்பும் முகவரைத் தேடுங்கள். (https://website-ras.eventbank.com/e-remittance)

✘ வாட்ஸ்அப் அல்லது உடனடி செய்தி அனுப்பும் தளங்கள் மூலம் ஒருபோதும் பணத்தை வீட்டிற்கு அனுப்ப வேண்டாம்.

## இந்த விவரங்களை யாருடனும் பகிர்ந்து கொள்ள வேண்டாம் - உங்கள் பணத்தைப் பறி கொடுத்து ஏமாந்து விடாதீர்கள்

| பயன்படுத்துவரின் தனிப்பட்ட ஐடி | கடவுச்சொல் / கடவு எண் (PIN) | OTP (ஒரு முறை கடவுச்சொல்) | வங்கி கணக்கு அல்லது வங்கி அட்டை விவரங்கள் |
|---|---|---|---|











அரசாங்க நிறுவனங்கள் எ.கா. மனிதவள அமைச்சு, சுகாதார அமைச்சு, மற்றும் வங்கிகள் எ.கா. டிபிஎஸ்(DBS) / பிஓஎஸ்பி(POSB), வாட்ஸ்அப் போன்ற உடனடி செய்தி அனுப்பும் செயலிகள் மூலம், இந்த தனிப்பட்ட வங்கி விவரங்களை ஒருபோதும் கேட்காது. உங்கள் வங்கி விவரங்களை யாருக்கும் வெளிப்படுத்த வேண்டாம். அனுப்புநரின் அடையாளத்தையும் மின்னஞ்சல்களையும் மற்றும் உங்களுக்குக் கிடைத்த உடனடி செய்திகளில் உள்ளனவற்றைச் சரிபார்க்காமல் எந்த இணைப்புகளையும் கிளிக் செய்ய வேண்டாம். குறிப்பாக, உடனடி செய்தி செயலிகள் மூலம் அரசாங்க நிறுவனங்கள் அல்லது வங்கிகளிடமிருந்து வருவதாகக் கூறும் நபர்களிடமிருந்து நீங்கள் எதிர்ப்பார்க்காத அழைப்புகள் வந்தால், அது குறித்து எச்சரிக்கையாக இருங்கள்.

**உங்கள் ஆரோக்கியம், வாழ்வாதாரம் மற்றும் நல்வாழ்வைக் கவனித்துக்கொள்வதற்கு நாங்கள் எங்களால் முடிந்த அனைத்தையும் செய்வோம்.**

**மனிதவள அமைச்சின் டெலிகிராம் சேனல் மூலம் கோவிட்-19 பற்றிய அண்மைய தகவல்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்:**